# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# இயேசு கடலின் பெருங்காற்றை அடக்கினார்




எழுதியவர் : Edward Hughes
சித்தரிப்பவர் : Janie Forest
மொழிபெயர்ப்பாளர் : Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: Ruth Klassen



**கதைகள்** 60 **ல்** 48

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil



இயேசுவும் அவருடைய சீஷர்களும் படவிலிருந்தபோது பெருங்காற்று வீசத்தொடங்கியது. கலிலேயாக் கடல் சீற்றத்தால் அடிக்கத்தொடங்கியது. இந்த விதமான பெருங்காற்று கப்பலை உடைத்து, அமிழ்த்திவிடும்.

1

சீஷர்கள் மிகவும் பயப்பட்டார்கள். அவைகள் படகை நீரால் நிரப்பிற்று. இந்த பெருங்காற்றின் மத்தியிலே, இயேசு தலையணையிலே நன்றாக நித்திரையாயிருந்தார்.



2

"ஆண்டவரே, ஆண்டவரே, நாங்கள் மடிந்து போகிறோம்!" என்று அழுதுகொண்டு இயேசுவை எழுப்பினார்கள்.




"அற்பவிசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள்?" என்று இயேசு சீஷர்களைக் கேட்டார். பின்பு இயேசு காற்றே வீசாதே என்று அதட்டினார். ... மற்றும் ... இயேசு நொறுக்கிய அலைகளை அமைதியாக இருக்கும்படி சொன்னார் ...




அப்பொழுது காற்று அமைதியாயிற்று ... கடல் சாந்தமுடன் நிசப்தமாகயிருந்தது.




சீஷர்கள் ஆச்சரியப்பட்டு சொன்னார்கள், "இவர் யாராயிருக்கக் கூடும், காற்றும் கடலும் இவருக்கு கீழ்ப்படிகிறதே!"




கொஞ்சநேரத்திற்குப் பின்னர், இயேசு அநேக வேலைகள் செய்து சுறுசுறுப்பாயிருந்தார். 5000க்கும் அதிகமானோர் அவரைப் பின் தொடர்ந்து வனாந்தரமான இடத்திற்கு வந்தார்கள்.




ஒரு சிறு பையனின் மதிய உணவைக் கொண்டு தேவனுடைய வல்லமையினாலே இயேசு அவர்கள் எல்லோரையும் போஷித்தார். இப்போது சாயங்காலமாயிற்று. இயேசு எல்லோரையும் திரும்ப அனுப்பிவிட்டார்.



சீஷர்களும் அங்கிருந்து போக வேண்டியதாயிற்று. இயேசு அவர்கள் ஒரு படவில் ஏறி கலிலேயா கடற்கரையின் அடுத்த பகுதிக்கு தனக்கு முன்னால் போகச் சொன்னார்.



9



அவர் எல்லோரையும் அனுப்பிய பின்னர், இயேசு தனிமையாக மலையின் மேல் ஏறி விண்ணப்பம் பண்ண ஆரம்பித்தார். சாயங்காலமானபோது, அவர் அங்கே தனிமையாகயிருந்தார்.

10



அங்கே கடலிலே, சீஷர்கள் கடுங்காற்றிலே அகப்பட்டுக் கொண்டார்கள். அவர்கள் கடினமாக அநேகநேரம் தண்டு வலித்தும், அவர்களால் அக்கரைப்பட முடியாமற் போயிற்று.

11



சீஷர்களுக்கு தெரியாமற் போயிற்று, அங்கு அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

12



அதிகாலையில் மூன்று மணிக்கும், ஆறு மணிக்கும் இடையில் கடல் காற்றினால் அலைப்பட்டிருப்பதற்கு மத்தியில், சீஷர்கள் கண்ட ஒரு காட்சியானது அவர்களை பயப்பட வைத்தது. "அது ஆவி" என்று கதறினார்கள்.

13



ஆனால் அது இயேசு, அவர்களுடைய பிரபுவும், ஆண்டவருமாயிருந்தவர், அவர்களை நோக்கிப் பார்த்து, தண்ணீரிலே நடந்து வந்தார்.

14

"நல்ல உற்சாகத்துடன் இருங்கள்!" இயேசு அவர்களை கூப்பிட்டார். "நான் தான் பயப்படாதிருங்கள்." பேதுரு பதிலளித்தான், "ஆண்டவரே, அது நீராக இருந்தால், நான் தண்ணீர் மேல் நடந்து உம்மிடம் வரச்செய்யும்." ஆகையால் இயேசு சொன்னார், "வா" தைரியமாக, பேதுரு படவிலிருந்து வெளியே வந்தான், பின்பு இயேசுவை நோக்கி நடந்தான்.



15



ஆனால் அவன் காற்றையும் வீசிய அலைகளையும் கண்டபோது, பேதுரு பயந்து நடுங்கி, தண்ணீரிலே அமிழ ஆரம்பித்தான். "ஆண்டவரே, என்னை இரட்சியும்!" என்று கதறினான்.

16

உடனே, தன்னுடைய கையை நீட்டி பேதுருவை பிடித்துக் கொண்டார். "ஒ அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?" என்று கேட்டார். பின்பு இயேசுவும், பேதுருவும் படவிலே ஏறினார்கள், அப்போது காற்று நின்று போயிற்று.



17



அப்போது படவிலே இருந்தவர்கள் அவரிடம் வந்து, பணிந்து கொண்டு இயேசுவை பார்த்து சொன்னார்கள், "உண்மையிலே நீர்தான் தேவனுடைய குமாரன்".

18

இயேசு கடலின் பெருங்காற்றை அடக்கினார்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 8, மத்தேயு 14, மாற்கு 4, லூக்கா 8

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.